
# ????????? ??????? 178 ????????? ?????????
????????!



நாட்டில் மேலும் 178 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று கண்டறியப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இவ்வாறு, தொற்று கண்டறியப்பட்டவர்கள் அனைவரும் ஏற்கனவே தொற்று கண்டறியப்பட்டவர்களுடன் தொடர்பில் இருந்தவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, மினுவாங்கொட மற்றும் பேலியகொட மீன் சந்தை கொரோனா கொத்தணியில் பாதிக்கப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை 20 ஆயிரத்தைக் கடந்து 20 ஆயிரத்து 124 ஆக அதிகரித்துள்ளது.

இந்நிலையில், நாட்டில் கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை 23 ஆயிரத்து 662ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்து இன்று மட்டும் 558 பேர் வீடுகளுக்குத் திரும்பியுள்ள நிலையில் இதுவரை 17 ஆயிரத்து 560 பேர் தொற்றிலிருந்து மீண்டுள்ளனர்.

இந்நிலையில், இன்னும் ஐயாயிரத்து 986 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

நாட்டில் கொரோனா தொற்றினல் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 116ஆகப் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ??????????? 100 ???????????? ??? ?????????????????- ?????????? ??????? ????????? ?????????




காரைநகரில் 100 குடும்பங்கள் வரை தனிமைப்படுத்தப்பட்டுள்ளதால் பிரதேசத்தின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

காரைநகர் இந்துக் கல்லூரி 3 நாட்களுக்கு மூடப்பட்டுள்ள நிலையில், யாழ்ரன் கல்லூரியில் 20 சதவீத மாணவர் வருகையே காணப்படுகிறது.

கொழும்பிலிருந்து காரைநகருக்குத் திரும்பிய ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை கடந்த வெள்ளிக்கிழமை உறுதிப்படுத்தப்பட்ட நிலையில், அவர் சென்று வந்த இடங்களில் தொடர்புடையவர்கள் கடந்த சனிக்கிழமை தனிமைப்படுத்தப்பட்டனர்.

கடந்த 21ஆம் திகதி, கொழும்பு- வெள்ளவத்தையிலிருந்து காரைநகருக்கு வருகை தந்த அவர், 3 நாட்களுக்கு மேல் பல இடங்களுக்கு நடமாடிய நிலையில், தனிமைப்படுத்தப்பட்டு கடந்த வெள்ளிக்கிழமை அவரது மாதிரிகள் பி.சி.ஆர்.பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட நிலையில் கொரோனா தொற்று உள்ளமை கண்டறியப்பட்டது.

அதனையடுத்து காரைநகர், சங்கானை மற்றும் யாழ்ப்பாணம் மாநகரம் ஆகிய சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளில் தொடர்புடையவர்கள் சுயதனிமைப்படுத்தப்பட்டனர்.

காரைநகர் இந்துக் கல்லூரியில் கற்பிக்கும் ஆசிரியர் ஒருவர் ஆலயம் ஒன்றில் சூரன் போர் பூஜை நடத்தியதால், அங்கு சென்ற அடியவர்கள் குடும்பத்துடன் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் காரைநகர் பிரதேசத்தில் இன்று (திங்கட்கிழமை), கடைகள் பல மூடப்பட்டுள்ளன. பிரதேசத்தைச் சேர்ந்த அரச ஊழியர்கள் பலர் பணிக்குச் செல்லவில்லை. பாடசாலையில் மாணவர் வரவு கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

காரைநகரில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்களில் ஒரு தொகுதியினரின் பி.சி.ஆர்.பரிசோதனை நாளை நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, சிறப்புத் தேவையுடைய ஒருவர் மூச்சுத்திணறல் காரணமாக மூன்று சக்கர வண்டியில் இன்று காலை காரைநகர் பிரதேச வைத்தியசாலைக்கு சிகிச்சைக்குச் சென்றுள்ளார்.

அவருக்கு சிகிச்சை வழங்க வைத்தியசாலை தரப்புகள் மறுப்புத் தெரிவித்து வெளியேற்றியதாக பிரதேச சபைத் தவிசாளருக்கு முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

---

# ???????????? ??????? ???????????? ???????????? ??????????



ஜெனிவா தீர்மானத்துக்கு வழங்கப்பட்ட இணை அனுசரணையிலிருந்து இலங்கை விலகியுள்ளதால் எதிர்வரும் மார்ச்சில் மற்றுமொரு பிரேரணை முன்வைக்கப்படும் என பிரிட்டன் நாடாளுமன்றத்தில் நேற்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்." – என்று எதிரணி பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியல்ல தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

" போர் முடிவடைந்த பின்னர் ஐ.நா. செயலாளரிடம் உள்ளக விசாரணைக்கு அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச உடன்பட்டிருந்தார். அந்த உறுதிமொழி நிறைவேற்றப்படாததால் இலங்கைக்கு எதிராக தொடர்ச்சியாக தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதுடன், பொருளாதார தடைக்கும் சர்வதேச தயாராகின.

இந்நிலையில்தான் நாம் உள்ளக விசாரணைக்கு உட்பட்டோம். ஆனால் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில்

நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு வழங்கப்பட்ட இணை அனுசரணையில் இருந்து இந்த அரசு விலகியுள்ளது. இது ஏற்புடைய நடவடிக்கை அல்ல என நான் ஏற்கனவே எச்சரிக்கை விடுத்திருந்தேன்.

உள்ளக விசாரணைக்கான உறுதிமொழியில் இருந்து விலகியுள்ளதால் அடுத்த மார்ச்சில் யோசனையொன்றை முன்வைப்பதற்கான ஏற்பாடுகள் இடம்பெறுவதாக பிரிட்டன் நாடாளுமன்றத்தில் கடந்த 25 ஆம் திகதி தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தவேண்டும். நடவடிக்கை எடுக்கவேண்டும். ஏனெனில் 2015 இற்கு முன்னர் இருந்த நிலை தெரியும்தானே? ” என்றார்.

---

# ?????????? – ???????????? ??? ??????????? ??????? ???????



இலங்கையில் கொரோனா வைரஸ் தாக்கத்தால் மேலும் இருவர் உயிரிழந்துள்ளனர்.


கொழும்பு – 02 ஐ சேர்ந்த 76 வயதுடைய ஆணொருவரும், கொழும்பு – 08 ஐ சேர்ந்த 96 வயதுடைய பெண்ணொருவருமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இதன்படி இலங்கையில் கொரோனா வைரஸ் தாக்கத்தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 109 ஆக அதிகரித்துள்ளது.

அதேவேளை, கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 22 ஆயிரத்து 988 ஆக அதிகரித்துள்ளது. இவர்களில் 16 ஆயிரத்து 656 பேர் குணமடைந்துள்ளனர். 6 ஆயிரத்து 225 பேர் சிகிச்சைபெற்றுவருகின்றனர்.

இன்று இதுவரையில் 487 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

# ???????? ????????????? – ??????
# ???????????????? ????????? ????????????



மாவீரர் நாள் நினைவேந்தலை நடத்த முற்பட்ட புனித மருத்தினார் குருபீடத்தின் முதல்வரான அருட்தந்தை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றினால் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்கு தயாராகியதாக அருட்தந்தை ஒருவர் யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். யாழ்ப்பாணம் ஆயர் இல்லத்துக்கு அருகில் உள்ள புனித மருத்தினார் குருபீடத்துக்கு முன்பாக அவர் இன்று மாலை 5.50 மணியளவில் கைது செய்யப்பட்டார்.

இளவாலையைச் சேர்ந்தவரும் புனித மருத்தினார் குருபீடத்தின் முதல்வருமான அருட்தந்தை பாஸ்கரனே இவ்வாறு யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். யாழ்ப்பாணம் புனித மருத்தினார் குருபீடத்துக்குள் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிராபகரனின் ஒளிப்படங்கள், விடுதலைப் புலிகள் அமைப்பின் சின்னங்களை உள்ளடக்கி அலங்கரித்து மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்கு தயாராகிய நிலையில் அவர் கைது செய்யப்பட்டார்.

நீதிமன்றத் தடை உத்தரவை மீறி நினைவேந்தலை நடத்த முயன்றமை உள்ளிட்ட 3 குற்றச்சாட்டுகளை முன்வைத்து இன்று யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். அருட்தந்தை சார்பில் சட்டத்தரணி அன்ரன் புனிதநாயகம் முன்னிலையாகினார்.

சந்தேக நபர் சார்பில் பிணை விண்ணப்பத்தை முன்வைத்து அவர் சமர்ப்பணம் செய்தார்.

பிணைக்கு கடும் ஆட்சேபனை தெரிவித்த பொலிஸார், சந்தேக நபருக்கு வெளிநாடுகளிலிருந்து நிதிப் பங்களிப்பு கிடைப்பது தொடர்பில் விசாரணை நடத்தப்படவேண்டும் என்றும் மன்றுரைத்தனர்.அருட்தந்தையை ஒரு லட்சம் ரூபாய் ஆள் பிணையில் விடுவிக்க யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது. அத்துடன் வழக்கு விசாரணை வரும் மார்ச் மாதம் வரை ஒத்திவைக்கப்பட்டது.

---

# ??????? ?????? ?????????? ???????????????? ???????? ?????




தமிழ் மக்களுக்காக அவர்களின் சுதந்திரமான வாழ்வுக்காக தமது இன்னுயிர்களை தியாகம் செய்த மாவீரர்களை நினைந்து அவர்களுக்கான அஞ்சலி நாளில் பிரித்தானிய புலம் பெயர் தமிழ் இளைஞர்களால் குருதிக்கொடை வழங்கப்பட்டுள்ளது.

மாவீரர் நினைவு நாளாகிய இன்று பிரித்தானியாவின் Edgware நகரிலுள்ள குருதிக்கொடை நிலையத்தில் தன்னார்வமாக திரண்ட புலம்பெயர் செயற்பாட்டாளர்கள் தமது குருதியை கொடையாக வழங்கி மாவீரர்களுக்கான தமது அஞ்சலிகளை செலுத்தினர்.


Blood Donor Centre



Blood Donor Centre
BN09 YXD





மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்கு தயாராகியதாக அருட்தந்தை ஒருவர் யாழ்ப்பாண பொலிசாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

யாழ்.ஆயர் இல்லத்திற்கு முன்பாக உள்ள சிறிய குருமடத்தின் முன்றலில் வைத்தே அவர் இன்று மாலை கைது செய்யப்பட்டார்.



# [illegible]



பிரித்தானியாவில் அமைந்துள்ள உலகத் தமிழர் வரலாற்று மையத்தில் தற்பொழுது இடம்பெற்று வரும் மாவீரர் நினைவேந்தல்.

பிரித்தானிய அரசின் கொவிட்-19 விதிமுறைக்கு உட்பட்டு குறித்த நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.











# [illegible]








மாவீரர் நினைவு நாளினை முன்னிட்டு பிரித்தானியாவின் பாராளுமன்ற கட்டடத்தொகுதியில் லேசர் கதிர்

ஒளிக்கற்றைகள் மூலம் பிரமாண்டமான கார்த்திகை பூ ஒளிரவிடப்பட்டது.

கொரோனா நோய் தொற்று நெருக்கடியினால் இன்று பல கட்டுபாடுகளுக்கு மத்தியில் மாவீரர் நினைவு நாள் உலகமெங்குமுள்ள தமிழர்களால் அனுஷ்டிக்கப்பட்டு வரும் நிலையில், பிரித்தானியாவில் உள்ள தமிழ் இளையோர் சிலரின் முயற்சியால் தமிழீழத்தின் தேசிய மலரான காந்தழ் பூ பிரித்தானிய பாராளுமன்ற கட்டடத்தொகுதியில் ஒளிரவிடப்பட்டது.

இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலையிலிருந்து சுதந்திரத்திற்காகா போராடிய மாவீரர்களை நாங்கள் நினைவில் கொள்கிறோம் என்ற வாசகங்களுடன் பிரமாண்டமாக ஒளிரவிடப்பட்ட கார்த்திகை மலரை பார்த்து எல்லோரும் மெய்சிலிர்த்து நின்றனர்.




யாரும் எதிர்பார்த்திராத குறித்த செயற்பாட்டை மேற்கொண்ட இளையோர் குழுவில் ஒரு வாரன சங்கர் இது குறித்து கருத்து தெரிவிக்கையில்,

"தாயகத்தில் இலங்கை அரசு மாவீரர்களின் நினைவுகூரலைத் தடுக்கவும் எங்கள் மக்கள் தியாகிகளை நினைவில் கொள்வதைத் தடுக்கவும் முயன்று வருகிறது. எங்கள் மக்கள் எதிர்கொள்ளும் இனப்படுகொலையை பிரித்தானியாவிற்கும் உலகமெங்கிலுமுள்ள மக்களிற்கு காண்பிப்பதற்காகவும் இங்கிலாந்தின் கொள்கைகள் எங்கள் சுதந்திரப் போராட்டத்தில் தொடர்ந்து தாக்கத்தை ஏற்படுத்துகின்றன என்பதை முன்னிலைப்படுத்தவும் லண்டனில் உள்ள இந்த கட்டிடத்தை நாங்கள் தேர்ந்தெடுத்தோம்." என அவர் தெரிவித்தார்.


WE REMEMBER


IE REMEMBER






ஆண்டான் அடிமை எனும் மனநிலையில் இருந்து, ஒரே நாட்டிற்குள் ஒற்றுமையாக வாழ விரும்பும் தமிழ் மக்களுக்கு இடையூறு விளைவிக்க வேண்டாம் என ஆட்சியாளர்களிடம் தான் கோருவதாக வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு இன்று (வியாழக்கிழமை) கருத்து தெரிவிக்கும்போதே எம்.கே.சிவாஜிலிங்கம் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர், "எந்த அரசாங்கத்தினாலும் தமிழ் மக்களின் நினைவேந்தும் உரிமையை தடுக்க முடியாது.

ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட ஆட்சியாளர்களிடம் சொல்ல விரும்புவது, தமிழர்களின் உரிமைகளை தடுக்கும் உரிமை உங்களுக்கு இல்லை. எனவே நாங்கள் நினைவேந்தல் செய்வதற்கு இடையூறு விளைவிக்காது இருக்க வேண்டும்.

ஒரே நாட்டினுள் ஒற்றுமையாக வாழவே தமிழ் மக்கள் விரும்புகின்றார்கள். எனவே தமிழ் மக்களுக்கு இடையூறு விளைவிக்காமல் நீங்கள் ஆளுபவர்கள், தமிழர்கள் அடிமைகள் எனும் மனநிலையில் இருந்து மாறுங்கள்" என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

---

# ?????????????? ??????? ????????? ???? ???????????? ??????????????????? ????????!



யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவன்  உயிரிழந்த வீட்டை சுற்றி உள்ள சிசிடிவி கேமராக்களின் பதிவுகளையும் மாணவன் பாவித்த கையடக்கத் தொலைபேசியின் உரையாடல் பதிவுகளையும் ஆராயுமாறு யாழ்ப்பான நீதிவான் நீதிமன்றம் பொலிஸாருக்கு கட்டளையிட்டுள்ளது.

உயிரிழந்த மாணவனின் வழக்கு இன்று நீதிவான் நீதிமன்றில் நடைபெற்றது. இதன்போது நீதிவான் மேற்படி கட்டளையை பிறப்பித்துள்ளதாக பாதிக்கப்பட்ட மாணவனின் சார்பில் மன்றில் ஆஜர் ஆகிய சட்டத்தரணி சுகாஷ் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்தூவ பீட மாணவன் உயிரிழந்தமை தொடர்பில் பலத்த சந்தேகங்கள் இருப்பதாக உறவினர்களால் தொடர்ந்து குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் குறித்த மாணவரின் சகோதரன் நீதி கோரி ஜனாதிபதி மற்றும் பிரதமர் மற்றும் பொலிஸ் மா அதிபர் ஆகியோருக்கு கடிதம் ஒன்றையும் அண்மையில் அனுப்பியிருந்தார்.

இவ்வாறான நிலையில் யாழ் நீதிமன்றில் இன்று நடைபெற்ற குறித்த வழக்கில் மாணவனின் மரணத்தில் சந்தேகம் இருப்பதாகவும் அது தொடர்பான விசாரணையை முன்னெடுக்க வேண்டும் என்றும் பாதிக்கப்பட்ட மாணவனின் சார்பில் ஆஜராகிய சட்டத்தரணி கனகரட்ணம் சுகாஷ் மன்றில் தெரிவித்திருந்தார்.

குறித்த வழக்கை விசாரித்த நீதிபதி மாணவன் வசித்த வீட்டை சுற்றியுள்ள இடங்களில் சிசிடிவி கேமரா

இருந்தால் அதன் ஒளிப்பதிவை எடுக்குமாறும் அதே நேரம் குறித்த மாணவனின் கையடக்கத் தொலைபேசி பதிவுகளையும் ஆராய்ந்து எடுக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்

---

# ????????????? ????? ??.??????????? ?????????? ?????




முப்பதெழுத்தில் அடங்கியிருக்கிறது தமிழின் உயிரும் மெய்யும் ஆனால் ஆறெழுத்தில் அடங்கியிருக்கிறது தமிழரின் உயிரும் மெய்யும் – கவிஞர் வாலி


நமது ஈழநாடு
www.namathueelanadu.com


நமது
ஈழநாடு
www.namathueelanadu.com


நமது ஈழநாடு
www.namathueelanadu.com


நமது ஈழநாடு
www.namathueelanadu.com















- 
- 





